# ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி )

நெ,7 ரேஸ் கோர்ஸ் சாலை, காஜா நகர், திருச்சிராப்பள்ளி - 620020

---

**பத்திரிகை செய்தி** **தேதி:01.08.2023**

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), பெண்கள் பிரிவின் தமிழாய்வுத் துறையில் முக்கூடல் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழா 01.08.2023 செவ்வாய் அன்று மதியம் 3 மணி அளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கிய மாணவி செல்வி வீ.காயத்ரி வரவேற்புரை வழங்கினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை முனைவர் பீ.ரஷிதா பேகம் அறிமுக உரை நிகழ்த்தினார். கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர் செல்வி ஏ.ஃபமிதா பானு அவர்கள் கலந்துகொண்டு மொழியின் மேன்மையினையும், தாய்மொழியின் சிறப்பினைப் பற்றியும் சிறப்பாக எடுத்தியம்பினார். கல்லூரியின் தேர்வு நெறியாளர் மற்றும் தமிழாய்வுத்துறைத் தலைவர் முனைவர் அ.சையது ஜாகீர் ஹசன் அவர்கள் மாணவிகளுக்கு உற்சாகமூட்டும் வார்த்தைகளால் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் தூய வளனார் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை முனைவர் ம. தனலட்சுமி அவர்கள் கலந்துகொண்டு ”வையத்தலைமை கொள்” என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினர். அவர்தம் உரையில் வையகத்தில் சிறப்பிடம் பெற்ற பெண்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் குறித்தும் எடுத்து கூறி மாணவர்களுக்கு நல்வழி காட்டினார். பெண்கள் பிரிவு பொறுப்பாளர் மற்றும் வருகைப் பதிவாளர் முனைவர் மு.ஹ.ஜஹானாரா கற்றலின் மேன்மையினை எடுத்தியம்பி வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர் அ.கா. காஜா நஜுமுத்தீன், பொருளாளர் ஹாஜி எம்.ஜே.ஜமால் முகமது , துணைச் செயலர் முனைவர் கே. அப்துஸ் சமது , கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என்.அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் கே.என்.முகமது பாசில் , துணை முதல்வர் முனைவர் டி.ஐ. ஜார்ஜ் அமலரத்தினம் மற்றும் கூடுதல் துணை முதல்வர்கள் ஏ.இஷாக் அகமது , முனைவர் ஏ.ஜே. ஹாஜா முகைதீன் , பெண்கள் விடுதி இயக்குனர் ஜெ. ஹாஜிரா பாத்திமா , சுயநிதி ஆண்கள் பிரிவு பொறுப்பாளர் முனைவர் க.இக்பால், கலைப்புல முதன்மையர் முனைவர் எ.மெஹதாப் ஷரிஃப், அறிவியல்புல முதன்மையர் எஸ்.வஹிதா கஃபாதின், தமிழ், ஹிந்தி, உருதுத் துறை பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சென்ற கல்வியாண்டில் முதல் இரு இடங்கள் பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. இறுதியில் மூன்றாம் ஆண்டு மாணவி செ.இம்னத் சாபிரா நன்றியுரை கூறினார்.


தமிழாய்வுத்துறை - மகளிர் பிரிவு
முக்கூடல்


தமிழாய்வுத்துறை - மகளிர் பிரிவு
முக்கூடல்
2023.08.01 16:00


ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
தமிழாய்வுத்துறை - மகளிர் பிரிவு


ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
தமிழாய்வுத்துறை - மகளிர் பிரிவு